**அட்டாளைச்சேனை பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2019 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 12 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகப் பெறப்பட்ட 107 நூலகப்புத்தகங்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட் டிருக்கவில்லை. | கணக்குகளில் சீர்செய்யப்பட வேண்டும். | நன்கொடையாகப் பெறப்பட்ட புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு 2020ஆம் இறுதிக்கணக்கறிக்கை தயாரிக்கப்படும்போது சொத்தாக சேர்த்துக்கொள்ளப்படும். |
| (ii) | 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சுகளின் பிரகாரம் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட 780 நூலகப் புத்தகங்களின் பெறுமதி மற்றும் 2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட 11 வகையான 24 பொருட்களின் பெறுமதிகள் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். | மேற்படி விடயம் சம்மந்தமாக பொருட் கணிப்பீட்டு சபையின் சிபார்சுகளின் பிரகாரம் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் பொருட்களின் பெறுமதிகள் 2020 ஆம் ஆண்டுக்கான இறுதிக்கணக்கறிக்கையில் சீராக்கம் செய்யப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார | குறித்த மீதியினை | கௌரவ சபையின் தீர்மானங்கள் மூலம் இப்பிரச்சினைக்கான இறுதித் |

| | | |
|---|---|---|
| சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 316,421 மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்படவேண்டிய வருமதிகள் ரூபா 350,321 என்பவற்றை செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 24 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | தீர்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தீர்வை எடுத்து இலங்கை மின்சார சபையால் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய குறித்த நிலுவைத் தொகையை தீர்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டுக்கான ஏனைய வருமானம் பி.ச.-07 அறிக்கையின்படி ரூபா 10,523,528 தொகையாக காணப்பட்டிருந்தும் வருமானச் செலவுக் கணக்கின்படி ரூபா 373,457 தொகையாக காணப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 10,150,071 தொகை இணக்கமின்மை காணப்பட்டது. | குறித்த இணக்கமின்மை யினை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | திண்மக்கழிவு சேவை நிலுவை கணக்குகளில் காட்டப்பட்ட தொகைக்கும் பதிவேட்டிற்கும் இடையில் ரூபா 742,802 தொகை வேறுபாடு காணப்பட்டிருந்தது. | கணக்கு மற்றும் பதிவேட்டின்படி மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். | சபையினால் பேணப்படுகின்ற ஏடுகளின் பிரகாரம் திண்மக்கழிவு கட்டண மீதித்தொகையே இறுதிக்கணக்-கறிக்கையிலும் காணப்படுகின்றுது. |

**(ஈ) கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,377,155 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்கு உரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமைப் புத்தகங்கள், மீதிகளை உறுதிப்படுத்தல் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர் வரும் காலங்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

------------------------

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | | | |
| | (i) விதி 15. | காணிக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது, ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்றன. | குறித்த விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காலாண்டுக் கொருமுறை காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்று மீளளிப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | (ii) விதி 217 | சபைக்குச் சொந்தமாக உள்ள சகல காணியும் கட்டிடங்களும் பீ.எஸ் - 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்றில் பதியப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சகல காணி கட்டிடங்களையும் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சபைக்கு சொந்தமான சகல காணி கட்டிடங்களையும் பதிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க மற்றும் 1988இன் 56ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க விநியோகிக்கப்பட்ட 2008 சனவரி 25ஆந் திகதிய 1523/16 ஆம் | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் கடந்திருந்த 16 தொழில்முயற்சிகளுக்காக புதிய அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள சுற்றாடல் புதிய தொழில்முயற்சிகளை இனங்காண்பதற்கான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் புதிய தொழில்முயற்சிகளை இனங்காண்பதற்கான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | தொழில் முயற்சிகளில் சில கைவிடப்பட்டுள்ளதுடன் ஏனைய தொடர்ந்து இயங்கும் தொழில் முயற்சிகளின் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பொதுச் சுகாதார பரிசோதகரினால் பரிசீலிக்கப்பட்டு சில தொழிற்முயற்சிகளுக்கு திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலே இன்னும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல். | | | அனுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,537,614 காலங்கடந்த 63 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் மீள வழங்குதல் தொடர்பில் உரியவர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் பகிரங்க அறிவித்தலும் வழங்கப்பட்டது. கொடுப்பனவுகளை பெற தவறும் பட்சத்தில் பெற்றுக்கொள்ளாத உரிய வைப்புக்களை முறைப்படி சபையின் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1993 ஆம் ஆண்டு அறவிடப்பட்ட வியாபார விற்பனை வரியின் ரூபா 7,390 மற்றும் 2000 ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 14,270 தொகை வருமான வரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லலை. | குறித்த வரி அறவீடுகள் தொடர்பில் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | வியாபார விற்பனை வரியானது தொடர்ச்சியாக காணப்படுவதுடன் அது தொடர்பான ஆவணங்களிலுள்ள குறைபாடுகள் காரணமாக குறித்த வரிகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியாமலுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்று தயாரிக்கும் நடவடிக்கை எடுக்க கருத்திற்கொள்ளப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 13,566,223 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,070,458 தொகையாக ஆக இருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 803,000 | 361,741 | 361,741 | -- | 733,000 | 271,375 | 271,375 | -- |
| வாடகைகள் | 2,600,000 | 2,368,950 | 2,368,950 | 273,000 | 1,950,000 | 1,902,253 | 1,902,254 | 273,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,405,000 | 1,094,610 | 1,094,610 | -- | 2,105,000 | 748,000 | 748,000 | -- |
| ஏனைய வருமானம் | 28,455,000 | 23,234,963 | 26,948,812 | 14,501,340 | 26,562,000 | 27,008,322 | 16,530,970 | 18,217,591 |
| | 33,263,000 | 27,060,264 | 30,774,113 | 14,774,340 | 31,350,000 | 29,929,950 | 19,452,599 | 18,490,591 |

### 2.2.2 வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 529 வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணமானது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார நிலையங் களுக்கான வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணமானது உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். | மேற்படி விடயம் சம்மந்தமாக, 2019 நிதியாண்டின் போது அனுமதிக்கப்பட்டிருந்த 02 வருமான பரிசோதகர்களும் வெற்றிடமாக காணப்பட்டதனால் குறித்த நிதியாண்டில் வருமான அறவீடு தொடர்பாக அதிக சவால்களை எதிரிநோக்கியதன் காரணமாகவே எங்களது முழு வருமானத்தையும் திரட்ட முடியாமல் போனாலும் தற்போது நிலுவைகளையும் சேர்த்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,888,254 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்படி விடயம் சம்மந்தமாக, பெறவேண்டிய முத்திரைக்கட்டணம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவைத்தொகையில் ரூபா 563,112.00 அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 டிசெம்பர் 31இல் உள்ளவாறான குத்தகை நிலுவை ரூபா 380,800 தொகை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் சீர்செய்யப்பட வேண்டும். | குறித்த நபர்கள் நாட்டில் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை முடியாமல் உள்ளது. |

### 2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| காரைதீவு பிரதேச சபையிடமிருந்து அறவிடவேண்டிய திண்மக்கழிவு நில நிரப்பு கட்டண நிலுவை ரூபா 1,712,948 இனை 03 ஆண்டுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவீடு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடந்த ஆண்டு உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் அமைச்சின் செயலாளர் உட்பட நடைபெற்ற கூட்டத்தில் குறித்த நிலுவையினை செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டு முதற்கட்டமாக குறித்த நிலுவையில் ஒரு பகுதியான ரூபா 500,000 வினை இவ்வருடம் செலுத்தியுள்ளது. மீதியினை கட்டம் கட்டமாக செலுத்த ஒப்புக் கொண்டுள்ளனர். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி தொடர்பான கருமங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 13 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் 2012 ஆம் ஆண்டில் 05 உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் தயாரிக்கப்பட்ட போதிலும், அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். | 07 உப விதிகள் மாகாண சபைக்கு அனுமதிக்காக உரிய காலப்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. 05 உப விதிகள் சரி பார்த்து ஆவணமாக தயாரிக்கப்பட்டு 2019.05.23 ஆம் திகதிய 2019/219 இலக்க சபைத்தீர்மானத்துடன் மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அனுமதி கிடைக்கப்பெற்று வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டதும் நடைமுறைப்படுத்தப்படும். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும. | மேற்படி விடயம் சம்மந்தமாக உப விதிகள் தொடர்பா கிழக்கு மாகாண சபையின் அனுமதி கிடைத்ததும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | சபையினால் நிதி ஒதுக்கீடு இனங்காணப் பட்டு ஒதுக்கீடு மேற் கொள்ளப்படல் வேண்டும். | நிலை போறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிக்கும் பொருட்டு 2020 ஆம் நிதியாண்டுக்கான பாதீடு தயாரிக்கப்படும்போது வறுமையினை குறைப்பதற்காக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ரூபா 6,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அலுவலகக் கட்டிடம், பொதுநூலகம், பொதுச்சந்தை, பொது விளையாட்டு மைதானம், பொதுக்கிணறுகள், திண்மக் கழிவு நிலையம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 33 காணிகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றுள் 26 காணிகளை இதுவரை அடையாளப்படுத்தி உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மேற்படி விடயம் சம்மந்தமாக சபையினால் அடையாளப்படுத்தப்பட்டு உரிமத்தினை பெற்றுக்கொள்ளாத காணிகளின் உரிமைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வேறு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்டு சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 07 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்படி சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்படாத வாகனங்கள் தொடர்பில் உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 06 பதவிகளுக்கான 07 வெற்றிட ஆளணிகள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. மேலும், செயலாளர் பதவி 2017 முதல் வெற்றிடமாக உள்ளது. ஜே.சி.பி இயந்திர இயக்குனர் பதவியானது கடந்த நான்கு வருடங்களாக வெற்றிடமாக உள்ளது. | உரிய வெற்றிடங்களின் அவசியத் தன்மையினைக் கேற்ப நிரப்புவதற்கான தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும். | மேற்படி விடயம் சம்மந்தமாக ஆளனி தொடர்பாக மாதாந்த அறிக்கைகள் பிரதி மாதம் தோறும் கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இது தொடர்பான நடவடிக்கைகள் கிழக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு காலப்பகுதியில் 08 உத்தியோகத்தர்களின் நிலுவையாகவுள்ள ரூபா 182,441 கடன் நிலுவைத் தொகைகளை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் நடவடிக்கைகள் எடுத்தல்வேண்டும் | தற்போது சேவையில் உள்ளவர்களிடம் உரிய திணைக்களங்களில் இருந்து கடன்களை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனையவர்களின் பிணையாளரிடமிருந்தும் மரணப் பணிக்கொடையிலிருந்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்நது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான உழவு இயந்திரமொன்று, தண்ணீர் பவுசர் ஒன்று, மோட்டார் சைக்கிள் 02 மற்றும் Single Drum Vibrator போன்றவை திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. | திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | திருத்தம் தொடர்பாக கிழக்கு மாகாண பிரத செயலாளரின் அறிக்கையினை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

#### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,400,000 நிதியைப் பயன்படுத்தி பள்ளக்காடு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்குகளின் எலும்புகளை அரைக்கும் நிலையம் | பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விலங்குகளின் எலும்புகளை அரைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட எலும்பரைக்கும் இயந்திர இயக்கத்திற்கு III Phase Line மின்சார வசதி தேவைப்பட்டதால் அதனைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் |

| | |
|---|---|
| மற்றும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இன்று வரை பாவனையின்றி காணப்படுகின்றது. | காரணமாகவே இவ்வியந்திரத்தை இயக்க முடியாமல் போயிருந்தது. எனினும் தற்போது III Phase Line பெறப்பட்டுள்ளதால் கூடியவிரைவில் இதனை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1இன் பிரகாரம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 24ஆம் திகதிய 128ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமானது உரியவாறு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் வரும் நிதியாண்டில் பெறுகைத்திட்டமானது உரியவாறு தயாரிக்கப்படும். |

#### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை கைநூல் 2.8.1 (அ) யின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினை நியமித்தல் வேண்டியிருப்பினும் செப்தெம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரைக்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையின்றி ரூபா.2,536,557 பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை கைநூல் பின்பற்றப்படல் வேண்டும் | குறித்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்றபோது பதலீடு செய்யப்படவில்லை. எனினும் தற்போது 2020 ஆம் நிதியாண்டுக்காக உரிய முறைப்படி தொழிநுட்பக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு நடத்தப்படல் வேண்டும். | ஆளனிப் பற்றாக்குறை காரணமாகவே எமது அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவினை நிருவுவதில் சவால்களை எதிர்நோக்குகின்றபோதும், தற்போது உள்ளகக் கணக்காய்வு பிரிவினை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 4.2 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 96,392 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 170,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு பாலமுனை - ஒலுவில் பிரதான வீதியில் சூரிய மின்சக்தியில் இயங்கும் 02 மின்குமிழ்கள் மற்றும் பொருத்துக்கள் 2015 திசெம்பர் 20 ஆம் திகதி களவாடப்பட்டமை தொடர்பாக இன்று வரை நிதி ஒழுங்குவிதி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2005 இல் களஞ்சியப் பதிவேட்டில் 96,392 பெறுமதியான மின்சார இருப்புப் பொருட்கள் தொடர்சிசியாக காட்டப்பட்டு வருகின்றன. ஆனால் அதற்கான எந்த ஆவனங்களும் காணப்படவில்லை மேலும் 2014ம் ஆண்டு காலப்பகுதியில் கொள்வனவு செய்து பொறுத்தப்பட்ட சூரியவழ மின்குமிழ்கள் 02 களவாடப்பட்ட விடயமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 273,300 ஆறு ஆண்டுகளாக அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபர்கள்நாட்டில் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை முடியாமல் உள்ளது. |